ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 160/18 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාදා — 1975.04.19

160/18 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I: தொகுதி (I)—பொது

அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (50)/75.

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மேல், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

சனாதிபதியின் அலுவலகம்,
நுவரெலியா, 1975 ஏப்பிறல் 19 ஆம் திகதி.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால (அரச காணிகளின்மீது அத்துமீறுதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இலங்கையிலுள்ள எதேனும் இடப்பரப்பை, இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகின்ற இடப்பரப்பொன்றாக, முதலமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், காலத்திற்குக் காலம் வெளிப்படுத்தலாம். அத்தகைய இடப்பரப்பானது, இதன்பின்னர் இவ்வொழுங்குவிதிகளில் " பிரகடனப்படுத்தப்பட்ட இடப்பரப்பு " ஒன்றெனக் குறிப்பிடப்படுதல் செய்யப்படுகின்றது.

3. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டு, யூன் 1 ஆந் தேதிக்குப் பின்னர் எந்நேரத்திலாவது, ஆளெவரும், தாமாகவோ தமது முகவர் மூலமாகவோ, எதேனும் பிரகடனப்படுத்தப்பட்ட இடப்பரப்பிலுள்ள அரச காணி எதன்மீதும் அத்துமீறுதலெதையும் செய்துள்ளாரென, அல்லது சட்டவிரோதமாக—

(அ) அதன்மீது எதேனும் வேலியை, கட்டடத்தை அல்லது வேறு அமைப்பைக் கட்டியுள்ளாரென ; அல்லது

(ஆ) அதன்மீது, எதேனும் பண்ணையை அல்லது பயிரிடுகையை நடாத்தியுள்ளாரென ; அல்லது

(இ) அதன்மீதுள்ள எதேனும் மரத்தைத் தறித்துள்ளாரென ; அல்லது

(ஈ) அதன்மீதுள்ள எவையேனும் நீர்வழிகளைத் திசைதிருப்பியுள்ளாரென ; அல்லது

(உ) அதன்மீதுள்ள காடெதனையும் எரித்துள்ளாரென ; அல்லது

(ஊ) அதன்மீதுள்ள மணலைத் தகர்த்தியுள்ளாரென ; அல்லது

(எ) அத்தகைய அரச காணியின் எல்லைகளை மாற்றியுள்ளாரென,

அரசாங்க அதிபர் அல்லது முதலமைச்சரால் அச்சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அரச அலுவலர் ஒருவர் (அத்தகைய அலுவலர் இவ்வொழுங்குவிதிகளில் இதன்பின்னர் " அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் " எனக் குறிப்பிடுசெய்யப்படுகிறார்) அப்பிராயப்படுமிடத்து, அப்பொருள்பட்ட சான்றிதழொன்றை அரசாங்க அதிபர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பொலிசுப் பரிசோதகர் பதவிக்குக் குறையாத பதவியிலுள்ள பொலிசு அலுவலரொருவருக்கு வழங்கலாம்.

(2) எவ்வாள் தொடர்பில் அரசாங்க அதிபர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் சான்றிதழொன்றை (1) ஆம் பந்தியின்கீழ் வழங்குகின்றாரோ அவ்வாள் இதனகத்திதன்மேல் இவ்வொழுங்குவிதிகளில் " அத்துமீறுதல் " எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றார்.

(3) ஒராம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்படும் சான்றிதழை அரசாங்க அதிபர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் வழங்குமுன்னர், தமது எதிர்வாதத்தைக் கூறுவதற்கான தருணமொன்றை அத்துமீறுநருக்குக் கொடுக்கும் நோக்கத்துக்காக, அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையை அவர் நடாத்துதல் வேண்டும்.

(4) மூன்றாம் பந்தியின்கீழான விசாரணையொன்றை நடாத்தும் நோக்கங்களுக்காக, அரசாங்க அதிபர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அத்துமீறுநருக்கு அறிவித்தலொன்றைச் சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது சேர்ப்பிக்கச் செய்தல் வேண்டும். அத்துமீறுநருக்கான அறிவித்தலை நேர்முகமாகச் சேர்ப்பிப்பதற்கு அல்லது சேர்ப்பிக்கச் செய்வதற்கு அரசாங்க அதிபர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் இயலாதவராயிருக்குமிடத்து, பிரச்சினையிலுள்ள காணியின்மேல் துலாம்பரமானதோர் இடத்தில் அறிவித்தலொன்று இணைக்கப்படுதல் அத்துமீறுநருக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டதற்கான போதிய சான்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

4. (1) மூன்றாம் ஒழுங்குவிதியின்கீழ் அரசாங்க அதிபரிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து சான்றிதழைப் பெறுகின்றவரான பொலிசு அலுவலர், பிரச்சினையிலுள்ள அரச காணியிலிருந்து அத்துமீறுநரை வெளியேற்றுவதும், அத்தகைய காணியின் மீதுள்ள வேலியை, கட்டடத்தை, அல்லது வேறு அமைப்பை அழிப்பதும், அத்தகைய காணியில் காணப்பட்ட எவையேனும் ஆயுதங்கள், கருவி வகைகள், விலங்கினங்கள் அல்லது பயிர்ச்செய்கையின் விளைபொருட்கள் என்பனவற்றைப் பறிமுதல் செய்வதும், அவரது கடமையாதல் வேண்டும்.

ஆயின, எவ்வாறாயினும், அவரது சட்டமுறையான உரிமைகளுக்குப் பங்கமான வகையில் அவர் வெளியேற்றப்பட்டதனால் அல்லது அவரது ஆதனம் பறிமுதல் செய்யப்பட்டதனால் இன்னலுறும் அத்தகைய எவரேனும் அத்துமீறுநர், உடைமையை மீண்டும் பெறுவதற்காகவேண்டி அல்லது அரசிடமிருந்து நட்டஈடுகோரி, தோதான நீதிமன்றமொன்றில் குடியுரிமை நடவடிக்கைகளைத் தொடரலாம்.

(2) ஓராம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பொலிசு அலுவலர், இவ்வொழுங்குவிதியின்கீழ் அவரது கடமைகளைப் புரிகையில், நியாயமாக அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய வலோத்காரத்தைப் பயன்படுத்தலாம் என்பதோடு, வேறெவரேனும் பொலிசுப் படையுறுப்பினர்களின் உதவியையும் கோரிப் பெறலாம்.

5. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அத்துமீறுநருக்கெதிராக எவையேனும் நடவடிக்கைகள் தொடரப்படுவதனை அல்லது தொடர்ந்து நடாத்தப்படுவதனை, இவ்வொழுங்குவிதிகளில் முற்போந்த ஏற்பாடுகள் தடைசெய்வனவாகக் கொள்ளப்படுதலாகா.

6. (1) காணியபிவிருத்திக் கட்டளைச்சட்டம், காட்டுக் கட்டளைச்சட்டம், முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டம் அல்லது முடிக்குரிய காணிகளில் அத்துமீறுதல் கட்டளைச்சட்டம் என்பனவற்றின்கீழ், அத்துமீறுநருக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் நடவடிக்கைகள் தொடரப் படுமிடத்து வேறேதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும் அத்தகைய நடவடிக்கைகள் எந்நீதிபதி முன்னர் தொடரப்படுகின்றனவோ அந்நீதிபதி, அத்தகைய நடவடிக்கைகள் முடிவுறும்வரை, அத்துமீறுநரை விளக்கமறியலில் வைத்தல் அவரது கடமையாதல் வேண்டும்.

(2) காணியபிவிருத்திக் கட்டளைச்சட்டம், காட்டுக் கட்டளைச்சட்டம், முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டம், அல்லது முடிக்குரிய காணிகளில் அத்துமீறுதல் கட்டளைச்சட்டம் என்பனவற்றின்கீழ், 1972, யூன் 1 ஆந் தேதிக்கும் இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வரும் தேதிக்குமிடையே அத்துமீறுநருக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் எவையேனும் நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய நடவடிக்கைகள் எந்நீதிபதியின் முன்னர்த் தொடரப்பட்டுள்ளனவோ அந்நீதிபதியின் முன்னர் அத்துமீறுநரைக் கைதுசெய்து முன்வைக்கும்படி, அல்லது அவரைக் கைதுசெய்வித்து முன்வைப்பிக்கும்படி பொலிசுப் பரிசோதகர் பதவிக்குக் குறையாத பதவியிலுள்ள பொலிசு அலுவலரொருவரை அரசாங்க அதிபர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பணிக்கலாம் என்பதுடன், அதன்மேல், வேறேதேனும் சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், அத்தகைய நீதிபதி முன்னரான நடவடிக்கைகள் முடிவுறும்வரை, அத்தகைய அத்துமீறுநரை விளக்கமறியலில் வைத்தல் அத்தகைய நீதிபதியின் கடமையாதலும் வேண்டும்.

(3) ஓராம், இரண்டாம் பந்திகளின் ஏற்பாடுகளிலுள்ள எது எப்படியிருப்பினும், அத்துமீறுநருக்கெதிரான நடவடிக்கைகள் எந்நீதிபதி முன்னர் தொடங்கப்பட்டுள்ளனவோ அந்நீதிபதி—

(அ) அத்துமீறுநரை விட்டுவிடுதலுக்குச் சட்டத்துறைத் தலைமையதிபதி அவரது எழுத்திலான சம்மதத்தைக் கொடுத்தால் ; அல்லது

(ஆ) அத்துமீறுநர் எக்காணிமீது அத்துமீறியுள்ளாரோ அக்காணியை அந்த நீதிபதியினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய தேதியின் முன்னர் விட்டு வெளியேறுவார் என அவர் எழுத்திலான பொறுப்புறுதியை அந்த நீதிபதிக்குக் கொடுத்தால்,

நியாயமானதென அந்நீதிபதி கருதக்கூடியவாறான அத்தகைய பிணையின் மேல் அந்த அத்துமீறுநரை விட்டு விடலாம்.

7. காணியபிவிருத்திக் கட்டளைச்சட்டம், அல்லது காட்டுக் கட்டளைச்சட்டம், அல்லது முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டம், அல்லது முடிக்குரிய காணிகளில் அத்துமீறுதல் கட்டளைச்சட்டம் என்பனவற்றின்கீழ், அத்துமீறுநருக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் எவையேனும் நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளவிடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதி, அவ்வாறு செய்வது உசிதமானதென அவர் கருதுமிடத்து அத்தகைய வழக்கானது எந்நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளதோ அந்நீதிமன்றத்திலிருந்து இலங்கையிலுள்ள வேறேதேனும் நீதிமன்றத்திற்கு அதனை மாற்றும்படி அவரது ஆணைமூலம் கட்டளையிடுவது, அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

8. (1) காணியபிவிருத்திக் கட்டளைச்சட்டம், அல்லது காட்டுக் கட்டளைச்சட்டம், அல்லது முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டம், அல்லது முடிக்குரிய காணிகளின் அத்துமீறுதல் கட்டளைச்சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகள் எவற்றுக்கும் முரணான செயலெதனையும் புரிவதற்கு எவரேனும் அத்துமீறுநருக்கு உதவியளிக்கும் அல்லது அவருக்கு உடந்தையாகவிருக்கும் எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நிதிவானொருவர் முன்னரான விசாரணையின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஈராண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்கு இருவகையிலொரு வகை மறியலுக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியல் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின்கீழான ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படும் எவரேனுமான் நீதிவானொருவர் முன்னர்க் கொணரப்படுவதன்மேல், அவர் முன்னரான நடவடிக்கைகள் முடிவுறும்வரை, அந்நீதிவானினால் விளக்கமறியலில் வைக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், தவறாவரை விட்டுவிடுதலுக்குச் சட்டத்துறைத் தலைமையதிபதி அவரது எழுத்திலான சம்மதத்தைக் கொடுத்தால், நியாயமானதென அந்நீதிவான் கருதக்கூடியவாறான அத்தகைய பணப் பிணையொடுகூடிய பிணையின்மேல் அத்தகைய தவறுநரை விட்டுவிடுதல் நீதிவானுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திஐந்தாம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அவசரகால (நாணாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகளின் 58 ஆம் ஒழுங்குவிதியின்கீழ், சட்டத்துறைத் தலைமையதிபதி தமது தத்துவங்களைப் பின்பற்றி,—

(அ) இவ்வொழுங்குவிதியின்கீழ் ஏதேனும் குற்றவழக்கைத் தொடருமிடத்து ; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதியின்கீழ் குற்ற வழக்கொன்று தொடரப்படுவதனை அங்கீகரிக்குமிடத்து,

சட்டத்துறைத் தலைமையதிபதி அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதுமிடத்து, பிரச்சினையிலுள்ள பிரகடனப்படுத்தப்பட்ட இடப்பரப்புக்கு வெளியே அமைந்துள்ள எந்நீதிமன்றத்திலும் அத்தகைய குற்றவழக்கைத் தொடருதல் அல்லது அது தொடரப்படுவதனை அங்கீகரித்தல், சட்டத்துறைத் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் எது தொடர்பிலும், எவரேனும் அரச அலுவலருக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் குடியுரிமை நடவடிக்கைகள் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எவையும் தொடரப்படுதலாகாது.

10. அரசாங்க அதிபர், இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அவருக்குள்ள தத்துவங்களுள் அல்லது பணிகளுள் எவற்றையும், அவரது நிருவாக மாவட்டத்திலுள் உள்ள எவரேனும் பதவிநிலை அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாம்.

11. இவ்வொழுங்குவிதிகளில்—

"அரசாங்க அதிபர்" என்பது, பிரகடனப்படுத்தப்பட்ட இடப்பரப்பின்மீது நிருவாக அதிகாரமுடைய அரசாங்க அதிபர் எனப் பொருளாகுமென்பதுடன், இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அரசாங்க அதிபர் எப்பதவிநிலை அலுவலருக்கு அவரது தத்துவங்களை அல்லது பணிகளைக் கையளிக்கின்றாரோ அப்பதவிநிலை அலுவலரையும் உள்ளடக்கும் ;

"பதவிநிலை அலுவலர்" என்பது, எப்பதவியின் தொடக்க வேதன அளவு, ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவுக்குக் குறையாததாகவுள்ளதோ, அப்பதவியை வகிக்கும் எவரேனும் அரச அலுவலர் எனப் பொருளாகும் ;

"அரச காணி" என்பது, காட்டுக் கட்டளைச்சட்டத்தின் 78 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு "முடியினால் கையாளப்படுவதற்குரிய காணி" என்ற அதே பொருளையுடையது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.